Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
10.63300/tmi12n062026.09 Vol. 12, No. 06 (2026) 12 06 2026 91–101 TIRJTS-2026-0016

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில் குளிர் மூலப்படிவம்

The Cold Archetype in the Kurinji Tinai Poems of Natrinai

A. Karthikeyan[1,*], Dr. S. Subash[2]

[1] Ph.D. Research Scholar Department of Tamil School of Social Sciences and Languages Central University of Tamil Nadu Thiruvarur.

[2] Assistant Professor Department of Tamil School of Social Sciences and Languages Central University of Tamil Nadu Thiruvarur

***Corresponding author:** A. Karthikeyan, karthikeyanannathurai147@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 12 October 2026
Revised: 15 October 2026
Accepted: 22 October 2026

Article ID
TIRJTS-2026-0016

Peer review
Double-blind peer review

Keywords
Archetype
Emotions
Cold
Kurinji
Nature

ABSTRACT

The concept of the archetype has played a significant role in the creative formation of Sangam literature's Tinai theory. This concept of the archetype was introduced by the psychoanalyst Carl Gustav Jung. In the Kurinji Tinai poems of Natrinai, the weather condition known as "cold" (kulir) is linked with human events and emotions in accordance with the poem's central theme and setting. Specifically, the cold season serves as an archetype that connects emotions such as fear, the inability to bear separation, anticipation, memory, and the cure for the disease of love with events like the female companion urging the hero to marry, and the mother performing the ritual exorcism (Veriyattu). Thus, it functions as a distinctive feature of the Kurinji Tinai.

How to cite this article: A. Karthikeyan, & Dr. S. Subash (2026). நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில் குளிர் மூலப்படிவம். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 91–101. https://doi.org/10.63300/tmi12n062026.09
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில் குளிர் மூலப்படிவம்

ஆய்வாளர் : அ.கார்த்திகேயன்

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சமூக அறிவியல் & மொழிகள் புலம்

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர்

karthikeyanannathurai147@gmail.com

நெறியாளர் : முனைவர் ச.சுபாஷ்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் புலம்

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர்

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கிய திணைக் கொள்கை படைப்பாக்கத்தில் மூலப்படிவத்தின் செயற்பாடு முக்கிய பங்காற்றியுள்ளது. இத்தகைய மூலப்படிவ கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தியவர் காரல் குஸ்தவ் யூங் என்னும் உளப்பகுப்பாய்வாளர் ஆவார். நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடல்களில் குளிர் என்ற தட்பவெப்பமானது பாடலின் மையப்பாடுபொருளுக்கும் சூழலுக்கும் ஏற்ப மனித நிகழ்வுகள், உணர்வுகள், ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது தோழி தலைவனை திருமணத்திற்கு தூண்டுதல், தாய் வெறியாட்டு எடுத்தல், முதலிய நிகழ்வுகளுக்கு அச்சம், பிரிவு ஆற்றாமை, எதிர்பார்ப்பு, நினைவு, காதல்நோய்க்கு மருந்து ஆகிய உணர்வுகளை இணைக்கும் மூலப்படிவமாக குளிர்காலம் விளங்கி குறிஞ்சித் திணையின் தனித்துவமாகவும் செயற்படுகிறது.

திறவுச் சொற்கள்

மூலப்படிவம், உணர்வுகள், குளிர், குறிஞ்சி, இயற்கை

முன்னுரை

இலக்கியப் படைப்பாக்கத்திற்கு நிலம், காலம், சூழலியல், மனித உணர்வுகள் முதலிய கூறுகள் இன்றிமையாதவைகளாக அமைகின்றன. சங்க இலக்கியம் இயற்கையின் இயல்புகளைச் சித்தரிக்கின்றன. தொல்காப்பியர் ஐவகை நிலத்தையும், அந்த நிலத்திற்குரிய ஒழுகலாறுகளையும் வகைப்படுத்தியுள்ளார். திணை அமைப்பு முறையில் குறிஞ்சித் திணை என்பது தனித்துவமிக்கதாக விளங்குகிறது. மேலும் தொல்காப்பிய பொருளாதிகாரத்தில் குறிப்பிடப்படும் கருப்பொருளின் பட்டியல்கள் காரல் குஸ்தவ் யூங் குறிப்பிடும் மூலப்படிவத்துடன் ஒத்துள்ளது. தொல்காப்பியத்தில் இடம்பெறும் தெய்வம் என்பது படிமமாகும், மக்கள் என்பது மானுடப் படிமமாகும், தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என்பது இயற்கை மற்றும் உயிரினத் தொகுதியின் படிமமாகும் எனவே திணை அமைப்பு முறையே ஒரு மூலப்படிவமாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில் நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள குளிர் கால மூலப்படிவங்களையும் அவற்றுக்கும் மனித உணர்வுக்கும், நிகழ்வுகளுக்கும் இடையிலான ஊடாடல்களையும் ஆய்வது முதன்மை நோக்கம் ஆகும்.

மூலப்படிவ விளக்கம்

மூலப்படிவம் என்பது காலங்காலமாக புழக்கத்தில் உள்ள பண்பாடு, ஆன்மீகம், சடங்குகள், மரபுகள், முதலியவைகளின் கருத்துருக்களுடைய தொகுதியே மூலப்படிவம் ஆகும். இத்தகைய கருத்துருக்கள் கூட்டு நனவிலி மனத்தில் படிந்து நனவு மனத்தின் வழியாக மனித வாழ்க்கைச் செயற்பாட்டினை இயங்கச் செய்வதாகும் மனிதனின் ஒவ்வொரு வாழ்க்கையின் நகர்விலும் இந்த மூலப்படிவம் முக்கிய பங்காற்றுகிறது.

இத்தகைய மூலப்படிவச் செயற்பாட்டினை "கூட்டு நனவிலியின் அடங்கல்களான மூலப்படிவங்கள் எண்ணம் – கருத்து – பழக்கம் – வழக்கம் – மனவெளி – கருத்துரு என உருவாகி மரபணு வழியில் மூலப்படிவமானவை. நனவிலிருந்து நனவடங்கு வழி தனியார் நனவிலி கடந்து கூட்டு நனவிலி ஆகிய மூலப்படிவங்கள் இன்று கூட்டு நனவிலியில் இருந்து தனியார் நனவிலி, நனவடங்கு வழியில் நனவாக வெளிப்படுகின்றன."(தி.கு.இரவிச்சந்திரன், புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுபாய்வும் பக்கம்.29) என்ற யூங்கின் விளக்கம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இலக்கியக் கட்டமைப்பு முறையில் பாடுபொருளின் கருத்துகளுக்கும் மனித உணர்வுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் இயற்கை மற்றும் இயற்கைச் சார்ந்த தொகுதிகளை குறியீடு, படிமம், முதலிய உத்திகளைக் கொண்டு இயைபுபடுத்துகின்ற முறையில் ஒரே வகைமாதிரிகள் திரும்ப திரும்ப பயன்படுத்துகின்ற போக்கில் தொடர்புடைய பொதுவான ஒரு மூலக்கருத்துரு முக்கியப் பங்காற்றுகிறது. இந்தச் செயற்பாடு தான் இலக்கியத்தில் மூலப்படிவங்கள் இயங்கும் முறையாகும்.

குளிர் கால மூலப்படிவம்


குளிர் என்கிற மூலப்படிவம் மிக ஆழமான சிந்தனைக் களமாகத் திகழ்கிறது. தமிழில் இதனை முன்பணி, பின்பணி, கூதிர், என்றும் அழைப்பர். குறிஞ்சிற்குரிய பெரும்பொழுதே குளிர் விளங்குவதாக தொல்காப்பியம் குறிப்பிடுவதை கீழ்க்காணும் நூற்பாவில் காணலாம்.

"குறிஞ்சி

கூதிர் யாமம் என்மனார் புலவர்"(தொல்.பொருள்.சூ.7)

மேலும் குளிரானது இயற்கையின் காலநிலையாகவும் உடல் உணர்வைத் தரும் நிலையாகவும் மட்டும் இல்லாமல் மலைநிலத்தில் உள்ள மழை, சாரல், அருவி, பனித்துளி, இரவு, முதலிய இயற்கைச் சூழலையும் மனிதர்களின் கூடல், பிரிவு, நினைவு, அச்சம், ஏக்கம் ஆகியவறை இணைக்கும் முக்கியமான மூலப்படிவச்

செயற்படுகிறது. அத்துடன் சூழ்நிலைக்கும் மனநிலைக்கும் ஏற்ப பொருள் மாற்றம் பெறும் இடப்பெயர்வு மூலப்படிவமாகச் செயல்படுவதையும் காணமுடிகிறது.



பிரிவாற்றாமையின் மூலப்படிவம்

தலைவனின் பிரிவை அறிந்த தலைவி துயரமடைந்து அவளுடைய கண்களில் வழியும் கண்ணீரைத் தோழி இயற்கைக் காட்சிகளோடு இணைத்து பிரிவு நிகழப்போகும் நிலையில் குளிர் காலமானது மூலப்படிவமாக செயற்படுவதை கீழ்க்காணும் பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவர் இயற்றிய நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில் காணமுடிகிறது.


“.....

பெரும்புயல் பொழிந்த தொழில எழிலி

தெற்கேர் பிரங்கும் அற்சிரக் காலையு

மரிதே காதலர்ப் பிரிதல் இன்றுசெல்” (நற்றிணை.05)

இப்பாடலில் அற்சிரக்காலம், வாடை, மழை, ஈரப்பதம், சுனைநீர் ஆகியவை ஒன்றினைந்து குளிர் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தலைவன் இப்பொழுது பிரியவில்லை ஆனால் அவன் பிரியப்போகிறான் என்பதை அறிந்த உடனே தலைவியின் மனமானது முன்கூட்டியே பிரிவு துன்பத்தை அனுபவிக்க ஆரம்பமாகிறது. இதனால் குளிர் இங்கு நிகழ்கால வானிலை அல்ல, எதிர்காலத்தின் பிரிவினுடைய முன்னுணர்வு ஆகிறது. ஆகையால் குளிர்காலத்தில் காதலரைப் பிரிந்து வாழ்வது மிகவும் கடினம் என்ற மனநிலையை இப்பாடலின் வழி அறியமுடிகிறது.



என்ற அமைப்பு முறையில் அமைந்துள்ளது.

மேலும், மதுரை மருதனிளநாகனார் என்னும் புலவர் இயற்றிய பின்வரும் நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில்,

“……

வெம்பகை அருமுனைத் தண்பெயல் பொழிந்தென

நீர்ஈர்ங் கரைநாள் மயங்கிக் கூதிரொடு

வேறுபுல வாடை அலைப்பத்

……”(நற்றிணை.341)

இப்பாடலில் போர்ப் பாசறையில் தலைவன் தனிமை துயரத்தின் காட்சி அமைந்துள்ளது. அச்சூழலில் புறத்தில் ஏற்படும் குளிர், தலைவனின் உள்ளத்தில் நிலவும் தனிமையின் குளிராக இணைக்கப்பட்டுள்ளன. மழை பெய்கிறது, குளிர்காலம் நிலவுகிறது, வாடைக் காற்று வீசுகிறது. இவை தலைவனின் உடலைத் துன்புறுத்துகின்றன. ஆனால் உடலில் ஏற்படும் குளிர்க்கு அப்பாற்பட்டு **“துணையிலேம், தமியேம் பாசறை யேமே” (341)** என்ற பாடல் வரியானது



என்ற உணர்ச்சித் தொடர்ச்சி உருவாகிறது. குளிரானது தலைவனின் காதல் உறவு துண்டிக்கப்பட்டதால் ஏற்பட்ட அகத்தனிமைத் துயரத்தின் குறியீடாக அமைகிறது. எனவே குளிர் என்பது ஒரு குறிஞ்சி நிலப் பருவக் காலம் என்பதற்கு அப்பாற்பட்டு, காதலரின் பிரிவால் ஏற்படும் தனிமைத் துயரத்தின் மூலப்படிவமாகவும் செயற்படுகிறது.

அச்சத்திற்கான மூலப்படிவம்


வண்ணக்கன் சொருமருங்குமரனார் என்னும் புலவர் இயற்றிய நற்றிணைக் குறிஞ்சித் திணைப்பாடலில் இரவுக்குறியில் வருகைத் தரும் தலைவனிடம், அவன் வரும் வழியின் ஆபத்துகளை எடுத்துரைத்து, இனிமேல் இரவு சந்திப்பைத் தவிர்த்து தலைவியைத் திருமணம் செய்து கொள்ள தோழி வலியுறுத்துகின்ற சூழலில்,

“ விளிவில் அரவமொடு தளிசிறந்து உறைஇ

மழையெழுந்து இறுத்த நளிர்தூங்கு சிலம்பில்” (நற்றிணை.257)

என்னும் பாடல் வரியில் நளிர் என்பது குளிர்ச்சி என்ற பொருளைத் தருகிறது. மழை பொழிந்து, இடியொலி முழங்கி, மலையருவிகள் பாய்ந்து கொண்டிருக்கும் மலைச்சூழல் காட்சியும், **“இலங்குவெள் அருவி வியன்மலைக் கவாஅன்” (மேலது)** என்று வெள்ளிய அருவிகளும் உயர்ந்த மலையும் சித்தரிக்கப்படுகின்றன எனவே குளிர் இங்குத் தனித்த ஒரு இயற்கைப் பொருளாக இல்லாமல், மழை ,மேகம் ,மலை , அருவி, இரவு,ஈரப்பதம் என்ற இயற்கைக் கூறுகளின் தொகுப்பால் உருவாக்கப்படும் உணர்வியல் மூலப்படிவம் ஆகிறது.

அத்துடன்,**“இயங்குநர் மடிந்த வயந்திகழ் சிறுநெறிக், „நடுநாள் வருதி நோகோ யானே.” (மேலது)** என்று கூறுகிறாள். வழிப்போக்கர்கள் நடமாட்டம் இல்லாத சிறிய பாதையில் கொடிய விலங்குகள் உலவுகின்றன என்பதை அறிந்தும், தலைவன் நடுயாமத்தில் வருகிறான் என்பதே தோழியின் கவலையாக இருக்கிறது. இதனால் குளிர்ச்சியான மலை இரவு தலைவனுக்கு இன்பமான காதல் சந்திப்பின் சூழலாக இருப்பதோடு, தோழியின் பார்வையில் ஆபத்தான இரவுக்குறியின் சூழலாகவும் உள்ளது.



என்ற கட்டமைப்பைக் காணமுடிகிறது. எனவே குளிர் மலை இரவு - காதலின் தீவிரத்தையும், இரவுக்குறியின் ஆபத்தையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் இயற்கைக் குறியீடு. இதுவே இப்பாடலின் குளிர் மூலப்படிவத்தின் சிறப்பாகும்.

மேலும் தலைவி காதல் வேட்கையின் காரணமாக உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் துயரடைந்துள்ளாள் அவளுடைய நிலையை அறியாத தாய், அந்தத் துயரத்திற்கு காரணம் காதல் என்பதை அறியாமல் வெறியாடல் சடங்கினை நடத்துவதற்கு முடிவு செய்கிறாள். அந்நிலையில் தலைவன் மறைந்து இருந்து கேட்கும் வகையில் தலைவி தோழியிடம் பேசுகின்ற சூழலில். **“……கனைதுளி தலைஇப், பெருந்தண் குளவி குழைத்த பாவடி…..”** (51) மழை, துளி. ஈரம், தண், தன்மை ஆகிய இயற்கைக் கூறுகளும், மற்றொரு பாடலில், **“நீர்கொள் நெடுஞ்சுனை…, கண்போல் நீலந் தண்கமழ் சிறக்குங்…,நெஞ்சுநடுக் குறூஉமவன்…” (273)** என்று இயற்கையின்

குளிர்ச்சியானது உள்ளத்தில் நடுக்கத்தை ஏற்படுத்துகின்றன இத்தகைய ஓர் இணைப்பை காண்கிறபொழுது அச்சம் மூலப்படிவ செயற்பாட்டை அறியமுடிகிறது.

காதல் நோய்க்கு மருந்தாகும் மூலப்படிவம்

நல்வேட்டனார் என்னும் புலவர் இயற்றிய நற்றிணைக் குறிஞ்சித் திணைப் பாடலில், தலைவியின் நோயைத் தீர்க்க அன்னை மலைப்பகுதிக்குச் சென்று நீராடச் சொல்வது முக்கியச் சூழலாக அமைவதைக் கீழ்க்காணும் பாடலில்,


“கனைபெயல் பொழிந்தெனக் கானக் கல்யாற்று” (நற்றிணை.53)

என்று உயர்ந்த மலை, இடியொலியுடைய மேகம், நள்ளிரவுக் கனமழை ஆகியவற்றை முன்வைக்கிறது. பின்னர்

“விருந்தின் தீநீர் மருந்து மாகும்

தண்ணென உண்டு கண்ணின் நோக்கி” (மேலது.53)

என்று குளிர்ந்த நீர் நோய்க்கு மருந்தாகும் என அன்னை கூறுவதாகத் தோழி தெரிவிக்கிறாள். எனவே இப்பாடலில் குளிர் மூலப்படிவத்தின் முக்கியக் குறியீடுகள்,



என்ற கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், நம்பிகுட்டுவனார் என்னும் புலவர் இயற்றிய 236 வது நற்றிணைக் குறிஞ்சிப் பாடலில், தலைவி தன் காமநோயின் வெப்பத்தைத் தணிக்க, தலைவன் வாழும் மலையிலிருந்து வரும் குளிர் காற்று தன் பசலை படர்ந்த உடலைத் தீண்ட வேண்டும் என்கிறாள். இங்குக் குளிர் என்பது இயற்கை நிகழ்வாக மட்டும் அமையாமல், தலைவியின் அகநிலையை வெளிப்படுத்தும் மூலப்படிவமாகச் செயல்படுவதை,

“நோயுங் கைம்மிகப் பெரிதே மெய்யுந்” (நற்றிணை.236)

இப்பாடலில் காமநோய் அளவுகடந்து பெரிதாகிறது; உடல் தீ உமிழ்வது போன்ற வெப்பத்தை அடைகிறது. இதற்கு நேரெதிராகப் பின்னர்,

“அண்ணல் நெடுவரை ஆடித் தண்ணென

வியலறை மூழ்கிய வளியென்” (மேலது.236)

என்று குளிர்ந்த மலையாற்றுக் காற்று வருகிறது. இதனால் பாடலின் அடிப்படை அமைப்பு



என்ற கட்டமைப்பில் அமைகிறது.

நினைவு மூலப்படிவம்

குறமகள் குறியெயினி பாடிய நற்றிணைக் குறிஞ்சிப் பாடலில், "குளிர்" என்ற சொல் நேரடியாக இடம்பெறவில்லை. ஆனால் **"பெயலுழந்து உலறிய.., அங்கண் அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை"**, (357) போன்ற நீர்–மழை–சுனைச் சூழல்களின் வழியாக குளிர்ச்சி உணர்வு ஏற்படுகிறது. எனவே இப்பாடலில் குளிர் மூலப்படிவத்தை நேரடிச் சொல்லாக அல்லாமல், நீர், மழை, சுனை, மலைச்சாரல், நீராடல் ஆகியவற்றின் தொகுப்பால் உருவாகும் மறைநிலை மூலப்படிவமாக செயல்படுவதைக் காணமுடிகிறது.

மூலப்படிவத் திறனாய்வில் இயற்கைப் படிமம் மனிதனின் ஆழமான உணர்வைத் தூண்டும் அடிப்படை வடிவமாக மாறும்போது அது மூலப்படிவமாகச் செயல்படுகிறது. இப்பாடலில் குளிர் என்பது உடல் உணர்வான குளிர்ச்சியிலிருந்து காதல் நினைவின் அகத்தணிவாக மாறுகிறது. தலைவி தற்பொழுது தலைவனைப் பிரிந்திருக்கிறாள். ஆனால் அவளது நெஞ்சு: **"நெஞ்சுவடுப் படுத்துக் கெடஅறி யாதே"(357)** என்று கடந்தகால அனுபவத்தால் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. எனவே மழையால் நனைந்த மலை, நீரால் நிறைந்த சுனை, நீரலை ஆகியவை வெறும் இயற்கைக் காட்சிகள் அல்ல; அவை தலைவனோடு இணைந்த இன்ப நினைவின் உணர்வுக் களமாக அமைகின்றன. ஆகையால்



என்ற உளவியல் அமைப்பில் திகழ்கிறது.

கூடலின் மூலப்படிவம்

தலைவன் திருமணத்தை விரைந்து மேற்கொள்ளாமல் நீண்டகாலம் களவொழுக்கத்தில் வந்து செல்கிறான்; அதனால் வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவிக்கிறாள் அதைத் தாங்காத தலைவி மறுமொழி உரைப்பதாக அமைந்துள்ள மாறோக்கத்து நப்பசலையார் இயற்றிய குறிஞ்சித் திணைப் பாடலின் இறுதியில் **"தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே"(304)** என்ற தொடர் வருகிறது. இங்குள்ள தண் என்பது குளிர்ச்சி, தண்மை ஆகியவற்றைக் குறிக்கும். தலைவனுடைய மார்பு மணம் கமழும் நறிய மாலையால் சூழப்பட்டு தண்ணியதாகக் காட்டப்படுகிறது.

இதனால் குளிர் என்பது இப்பாடலில் பருவநிலை சார்ந்த இயற்கைக் கூறாக மட்டும் இல்லாமல், தலைவனின் மார்போடு இணைந்த அகப்பொருள் குறியீடாக அமைகிறது. தலைவி தலைவனுடன் கூடும்போது அவளுடைய அழகு பெருகுவதை **"புணரிற், புணருமார் எழிலே"(304)** ஆனால் அவன் பிரிந்தவுடன் அவளுடைய உடல் பசலை கொண்டு அழகு சிதைவதை **"பிரியின், மணிமிடை பொன்னின் மாமை சாய என் அணிநலஞ் சிதைக்குமார் பசலை" (304)** இவ்விரு நிலைகளுக்கும் மையமாக இருப்பது தலைவனுடைய மார்பு.



எனவே, தண் என்ற குளிர்ச்சிப் படிமம் தலைவனுடைய மார்பின் அன்பு, அணைப்பு, ஆறுதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகிறது. இங்கு குளிர்ச்சி என்பது உடலுக்குத் தரும் தணிவு மட்டுமல்ல காதலால் துயருற்ற தலைவியின் உள்ளத்தைத் தணிக்கும் தலைவனின் அணைப்பிற்கு மூலப்படிவமாக செயற்படுகிறது.

முடிவுரை

நற்றிணையின் இக்குறிஞ்சிப் பாடல்களில் குளிர் என்ற மூலப்படிவம் இயற்கையின் தட்பவெப்ப நிலையை மட்டும் குறிப்பிடுவதாக அமையவில்லை. மாறாக, அது மலை, மழை, பனி, சுனை, சாரல், அருவி, வாடை, கூதிர், ஈரம் ஆகிய இயற்கைப் படிமங்களின் வழியாக மீண்டும் மீண்டும் உருவாக்கப்படும் ஆழ்நிலைப் படிமமாகத் திகழ்கிறது.இதன் மைய கட்டமைப்பு குளிர்ந்த இயற்கை → உடல் உணர்வு → மன நடுக்கம்/தணிவு → காதல் அனுபவம் → பண்பாட்டு ஒழுக்கம் என்பதாக அமைகிறது. ஆக, குளிர் என்பது குறிஞ்சித் திணையில் ஒரு தனிப்பட்ட இயற்கைப் படிமத்திலிருந்து வளர்ந்து, பிரிவாற்றாமை, காதல் நோய்க்கு மருந்து, அச்சம், நினைவு, கூடல் என்ற மனித மன அனுபவத்துடன் இணைக்கப்படுகின்ற ஆழ்நிலை மூலப்படிவமாக விளங்குகிறது.

துணைநூற் பட்டியல்

References

இரவிச்சந்திரன்.தி.கு.புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பாய்வும் அலைகள் வெளியீட்டகம் : 2017.

பாலசுந்தரம்.ச.பாவலரேறு. (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை,பெரியார் பல்கலைக் கழகம் வெளியீடு, பிப்ரவரி : 2012.

நாராயணசாமி ஐயர்.அ.திரு.பின்னத்தூர். (உரையாசிரியர்), நற்றிணை நானூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறு அச்சு : 2017.